DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 417/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-6 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பூமிநாதன் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.03.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திருவாடானை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேலும் அயல்பணியாக தொண்டி காவல் நிலையத்திலும் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.12.2021 தேதி காலை 11.30 மணிக்கு நிலைய சார்பு ஆய்வாளர் விஜயபாஸ்கரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது ரவிந்திரன் மனைவி சாந்தி என்பவர் நிலையம்ஆஜராகி கொடுத்த புகார்மனுவை

பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.328/22 u/s 294(b),324,506(ii) iPC r/w 4 TNPHW Act ஆக வழக்கு பதிவுசெய்துள்ளார் அவர் பதிவுசெய்து முதல் தகவல்அறிக்கை அ.சா.,ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

2.வழக்கினை விசாரணைக்கு எடுதது கொண்ட மேற்படி சார்பு ஆய்வாளர் அன்றைய தினமே 12.45 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் நாகேந்திரன்ஆகியோர் முனனிலையில் பார்வைகமசர், வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வைமகசர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடுசெய்யப்பபடுகிறது. பின்னர் அ.சா.1 சாந்தி, அ.சா.2 ரவிந்திரன்., அ.சா.3 தங்கராஜ், அ.சா.4 குமார் அ.சா.5 நாகேந்திரன், நாகநந்தினி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்துள்ளார்.

3.,வழக்கின் எதிரி முத்தப்பா மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை உயர்கிளையில் முன்பிணைபெற்றதால் அவர் மீது கைது நடடிவக்கை மேற்கொள்ளப்படவில்லை. சார்பு ஆய்வாளர் விஜயபாஸ்கரன் பணியிட மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துகொண்டு சாடசிகளை மீண்டும் விசாரித்ததில் முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதை போலவே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலஙகள் எதுவும் பதிவுசெய்யவில்லை.

4.பின்பு புகார்தாரருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் கோகுல் அவர்களை விசாரித்து புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் சாதரணா காயம் என சான்று பெற்றேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா. ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** எனது விசாரணையை முடித்து எதிரிமீது u/s 294(b),324,506(ii) iPC r/w 4 TNPHW Act குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினமானது 04.12.2022 மாலை 05.00 மணி என்றால் சரிதான். புகார்தாரர் 05.12.2022 காலை 11.30 மணிக்கு தான் புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி கால தாமத்திற்கான காரணத்தினை புகார் மனுவிலும், முதல் தகவல்அறிக்கையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் சம்பவத்திற்கு முன்பு பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட்டார் என்றால சரிதான். அவரை எதிரித்து ஆஜர்எதிரியின் அக்கா மகள் போட்டியிட்டார் என்றால் சரிதான். எதிரியின் அக்கா மகள் தான் பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்றார் என்றால்ச ரிதான். மேற்படி பஞ்சாயத்து தேர்தலால் இருதரப்பினரும் பேசிகொள்ளமாட்டார்கள் என்றும் அவர்களுக்குள் முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு புகார்தாரர் எதிரி மீது அளித்த பொய் புகாரை சரிவர விசாரிக்காமல் முதல தகவல் அறிக்கை பதிவுசெய்து குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்

2. சம்பவயிடத்திற்கு அருகே ரீட்டா, பட்டானி, செல்லமுத்து, பிரியங்கா ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து மேற்படி நபர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான். மேற்படி நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவமானது உண்மையாக நடைபெற்றுஇருந்தால் மேற்படி நபர்களை விசாரித்து இருந்திருப்பேன் என்றும் சம்பவம் உண்மையாக நடைபெறாததால் தான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1, அசா.2 தாக்கவில்லை என்றும் அவர்களுக்கு வேறுவிதமாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீதுபொய்யாக புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

3,.நான் சொன்னவாறு சொன்ன தேதியில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் முன் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு புகார்தாரர் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துளளார் என்றால் சரியல்ல., வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம்இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.